# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ்நாடு தொலைத் தொடர்பு ஒப்பந்த தொழிலாளர் சங்கம்
### தமிழ் மாநிலம்

**பதிலடி கொடுப்போம்...**
**அநீதி களைவோம்...**



அன்புமிக்க தோழர்களே,

வேலூர் மாவட்ட நிர்வாகம் தானடித்த மூப்பாக 140 ஒப்பந்த ஊழியர்களை இன்று (01.08.2014) முதல் பணி நீக்கம் செய்து உத்தரவிட்டுள்ளது. இந்த 140 ஒப்பந்த ஊழியர்களும் SSI செக்யூரிட்டி சர்வீசஸ் என்ற காண்ட்ராக்டரின் கீழ் பணியாற்றி வந்தனர். இந்த காண்ட்ராக்டர் இந்திய தொழிலாளர் சட்டத்தின் படி ஒப்பந்த ஊழியர்களுக்கு வழங்கவேண்டிய பஞ்சப்படியை வழங்க மறுத்தார்.

வேலூர் பொது மேலாளரிடம் இப்பிரச்சனையை நமது மாவட்ட சங்கம் கொண்டு சென்றது. ஒப்பந்த ஊழியர்களுக்கு பஞ்சப்படி கிடையாது என பொது மேலாளரும் கூறினார். பஞ்சப்படி வழங்க BSNL தலைமையக உத்தரவை நமது மாவட்ட சங்கம் கொடுத்தது. வேண்டா வெறுப்பாக அதனை பெற்றுக்கொண்ட பொது மேலாளர் பஞ்சப்படி வழங்க காண்ட்ராக்டருக்கு உத்தரவிட்டார். அந்த உத்தரவை காண்ட்ராக்டர் அமலாக்க மறுத்ததால் பொது மேலாளர் அவரது டெண்டரை 31.07.2014 முதல் ரத்து செய்தார்.

01.08.2014 முதல் 140 ஒப்பந்த ஊழியர்களுக்கும் பணி இல்லை என்ற உத்தரவை கொஞ்சமும் கலங்காமல் வேலூர் பொது மேலாளர் உத்தரவிட்டுள்ளார். இந்த 140 தோழர்களும் House Keeping மற்றும் Cable பணிகளில் பல வருடங்களாக பணியாற்றி வருகின்றனர். இவர்களை வேலையை விட்டு நிறுத்துவது என்பது அவர்களின் குடும்பங்கள் உட்பட

கடுமையான பாதிப்பை உருவாக்கும் என்ற மனிதாபிமான உணர்வு கூட பொது மேலாளருக்கு இல்லாமல் போனது ஏன்?

140 ஒப்பந்த ஊழியர்களின் உழைப்பை பல வருடங்களாக உறிஞ்சிவிட்டு சக்கையாக தூக்கி எறிய மாவட்ட நிர்வாகம் நினைக்கிறது. இவர்கள் சக்கைகள் அல்ல. மாறாக BSNL நிறுவனத்தை பாதுகாக்கும் பணியில் ஈடுபடக்கூடிய உழைப்பாளி வர்க்கத்தை சார்ந்தவர்கள். இவர்களைத் தூக்கி எறிய ஒரு போதும் நமது தொழிற்சங்கம் அனுமதிக்காது.

140 தோழர்களை மீண்டும் பணிக்கு எடுக்க வேண்டும் என்று சொல்லி வேலூரில் நமது இரண்டு மாவட்ட சங்கங்களும் கோபாவேசத்தோடு உண்ணாவிரதத்தை தொடங்கி உள்ளனர். இந்த உண்ணாவிரதம் தொடர்ந்து நடைபெறும். நிர்வாகம் ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றவில்லை எனில் பரவும் தீயாக போராட்டம் தமிழகம் எங்கும் வெடிக்கும்.

தோழர்களே, வேலூர் நிர்வாகத்தின் அடக்குமுறையை நாம் எதிர்த்துப் போராடுவோம். இதில் நாம் தவறினால் தமிழகமெங்கும் அதே ஆயுதத்தை நிர்வாகம் எடுக்கும். எனவே நமக்கும் நிர்வாகத்திற்குமான யுத்தம் துவங்கிவிட்டது. நமது யுத்தத்தில் நியாயம் நமது பக்கமே உள்ளது என்பதை உரத்துச் சொல்லி புரியவைப்போம்.

வேலூர் மாவட்ட நிர்வாகம் 140 தோழர்களையும் உடனடியாக பணிக்கு எடுக்க வேண்டும். இதுவே நமது நியாயமான கோரிக்கை.

**போராடுவோம்... வெற்றி பெறுவோம்...**

தோழமையுடன்

| | |
|---|---|
| **C.வினோத்குமார்** | **S.செல்லப்பா** |
| மாநிலச் செயலர் | மாநிலச் செயலர் |
| TNTCWU | BSNLEU |